## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்

**முன்னிலை: திரு. கி. ஆனந்த்., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் வள்ளியூர்**

2025 வது வருடம், பிப்ரவரி மாதம், 24–ம் நாள், திங்கட்கிழமை

**M.P. No. 01/2025**
**in**
**Crl.M.P. No. 152/2025**

தேவேந்திரபாண்டியன் .........மனுதாரர்

எதிர்

வின்சென்ட் ..........எதிர்மனுதாரர்

இம்மனுவானது 24.02.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. பாண்டியராஜா அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. அசல் வழக்கை திரும்ப சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுவை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

<u>மனுவின் சுருக்கம்</u>

2. மனுதாரர் அசல் வழக்கில் புகார்தாரர். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் எதிரி. அசல் வழக்கை மனுதாரர் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்து, அதிலுள்ள குறைகளை நிவர்த்திசெய்து 30 நாட்களுக்குள் திரும்ப சமர்ப்பிக்க வேண்டி 03.10.2024 அன்று திருப்பப்பட்டிருந்தது. மேற்படி மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், மனுதாரரின் மகளின் இழப்பினாலும் மேற்படி வழக்கை 01.11.2024க்குள் தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால் ஏற்பட்ட 42 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. மேற்படி வழக்கு 01.07.2024 அன்று திருப்பப்பட்டு 07.08.2024 அன்று 07 நாட்கள் காலதாமதத்துடனும், மேற்படி வழக்கு 03.10.2024 அன்று திருப்பப்பட்டு 07.12.2024 அன்று 35 நாட்கள் காலதாமதத்துடனும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதத்தை மன்னிக்க கோரி இந்த நீதிமன்றத்தில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், மனுதாரரின் மகளின் இழப்பினாலும் மேற்படி காலதாமதம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மனுதாரர் காலதாமதத்திற்குண்டான போதுமான காரணத்தை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேற்படி காலதாமதம் வழக்கை திரும்ப சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் என்பதாலும், இது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இரு தரப்பும் கேட்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டியது அவசியம் என்பதாலும், மனுதாரர் பாதிக்கப்பட்ட நபர் என்பதாலும், இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு மேற்படி திரும்ப சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடப்படுகிறது .

**எனவே மேற்கண்டவாறு இந்த மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025.ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 24ம் நாள் திங்கட்கிழமை அவையறிய பகரப்பட்டது

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2025.02.24 17:23:28 +0530

**நீதித்துறை நடுவர்,**
**வள்ளியூர்.**